# ஜோர்தான் நாட்டில் உள்ள இலங்கையர்களுக்கான விசேட அறிவித்தல்

தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, ஜோர்தானில் வசிக்கும் இலங்கையர்கள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துமாறு இலங்கை தூதரகம் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது:

1. மறு அறிவிப்பு வரும் வரை, பொதுக் கூட்டங்களை ஏற்பாடு செய்வதை தவிர்க்கவும். நீண்ட தூரப் பயணங்களை தவிர்க்கவும். அவசர நிலைமைகள் தவிர இரவு நேரப் பயணங்களை மேற்கொள்ள வேண்டாம்.
2. செல்லுபடியாகும் விசா அல்லது கடவுச்சீட்டு இல்லாவிடில், உங்கள் பழைய கடவுச்சீட்டு/தேசிய அடையாள அட்டை அல்லது உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏதேனும் ஆவணத்தின் நகலை வைத்திருக்கவும்.
3. ஜோர்தான் பாதுகாப்பு அதிகாரிகள் உங்கள் விசா அல்லது கடவுச்சீட்டை கோரினால், உங்கள் இலங்கை அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் உங்கள் ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும்.
4. அவசரநிலையின் போது ஒரு இலங்கையருக்கு ஏதேனும் விபத்து ஏற்பட்டால், தயவுசெய்து அந்த நபரின் பெயர், வேலை செய்யும் இடம் மற்றும் தொலைபேசி எண்ணுடன் உடனடியாக தூதரகத்திற்குத் தெரிவிக்கவும்.
5. அவசரநிலை ஏற்பட்டால், அத்தகைய சூழ்நிலை தொடர்பான தகவல்களை இலங்கை தூதரகத்துடன் பகிர்ந்து கொள்ளவும்.
6. இலங்கையில் வசிக்கும் உங்கள் நெருங்கிய உறவினர்களுக்கு உங்கள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு குறித்து தெரிவிக்க குறைந்தபட்சம் ஒரு குறுஞ்செய்தியை அனுப்பவும்.
7. உறுதிப்படுத்தப்படாத தகவல்களை பகிர வேண்டாம்.

உங்கள் பாதுகாப்பே எங்களின் முக்கிய பொறுப்பு ஆகும். எனவே, ஏதேனும் அவசரநிலையில் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறு தூதரகம் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

- இலங்கை தூதரகம் - **00962 65820611/ 12**
- தற்காலிக தூதரகப் பொறுப்பாளர் - **00962 781365773**
- ஆலோசகர் ( வேலைவாய்ப்பு மற்றும் நலன்) - **00962 770099944**
- கொன்சுலர் அதிகாரி - **00962 781548585**
- அவசர இலக்கம் (Hotline) - **00962 777313323**
- வாட்ஸ் அப் ( WhatsApp) - **00962 777313323**
- மின்னஞ்சல் முகவரி - **slemb.amman@mfa.gov.lk**

இலங்கை தூதரகம்
ஜோர்தான்
**02.03.2026**